இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"செவிசாய்த்தல், நோன்பு: தவக்காலம் மனமாற்றத்தின் காலம்" என்ற தலைப்பில் தனது தவக்காலச் சிந்தனைகளை வழங்கியுள்ள திருத்தந்தை, "கடவுளுடைய வார்த்தைக்கு நம் இதயங்களைத் திறக்கும்போது மனமாற்றம் தொடங்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

# 2026-ஆம் ஆண்டிற்கான திருத்தந்தையின் தவக்காலச் செய்தி!


திருத்தந்தை பதினான்காம் லியோ (AFP or licensors)

திருத்தந்தை இவ்வாண்டிற்கான தனது தவகாலச் செய்தியில், உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் தவக்காலத்தை செவிசாய்த்தல், உண்மையான நோன்பு மற்றும் நீதிக்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பின் காலமாகக் கடைபிடிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பிப்ரவரி 13, வெள்ளிக்கிழமையன்று வெளியிட்டுள்ள இவ்வாண்டிற்கான தவகாலச் செய்தியில் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ள திருத்தந்தை, நவீன கால மனப்பதற்றங்கள் மற்றும் கவனச் சிதறல்களுக்கு மத்தியில் கடவுளை தங்கள் வாழ்க்கையின் மையத்தில் கொள்ளுமாறு விசுவாசிகளை வலியுறுத்தியுள்ளார்.

"செவிசாய்த்தல், நோன்பு: தவக்காலம் மனமாற்றத்தின் காலம்" என்ற தலைப்பில் தனது தவக்காலச் சிந்தனைகளை வழங்கியுள்ள திருத்தந்தை, "கடவுளுடைய வார்த்தைக்கு நம் இதயங்களைத் திறக்கும்போது மனமாற்றம் தொடங்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஏழைகளின் குரலுக்குச் செவிசாய்க்கும் கடவுள்

"விசுவாசிகள் திருவிவிலியத்திற்கும், ஏழைகள் அல்லது துயருறுவோரின் குரல்களுக்கும் கவனமுடன் செவிமடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, "கடவுள் தம்முடைய மக்கள் உதவிக்காகக் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது, அக்குரலுக்குச் செவிசாய்க்கும் ஒருவராக அவரைத் திருவிவிலியம் எடுத்துக்காட்டுகிறது" என்று நினைவூட்டியுள்ளார்.

கடவுளுக்கும் அடுத்திருப்போருக்கும் இடையிலான உறவின் அடித்தளமாக செவிமடுப்பதை விவரித்துள்ள திருத்தந்தை, "சமூகத்தில் ஏற்படும் அநீதியை உணர்ந்து அதற்குப் பதிலளிக்க கிறிஸ்தவர்களுக்கு திருமறைநூல் கற்பிக்கிறது" என்று மொழிந்துள்ளார்.

மேலும் ஏழைகளின் நிலை, தனிநபர்கள், அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகள் மற்றும் திருஅவைக்கே தொடர்ந்து சவாலாக உள்ளது என்பதை வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

### நோன்பு என்பது இதயத்தைத் தயார்படுத்துவது

அடுத்து நோன்பு குறித்து தனது சிந்தனைகளைத் திருப்பிய திருத்தந்தை, "இது கடவுளின் வார்த்தையைப் பெற இதயத்தைத் தயார்படுத்துவதற்கான ஓர் உறுதியான வழி" என்று விவரித்துள்ளார்.

"உணவைத் தவிர்ப்பதைத் தாண்டி, விசுவாசிகள் தங்கள் ஆழமான ஆசைகளை ஆராயவும், நீதிக்கான தாகத்தைப் புதுப்பிக்கவும், அற்ப நிறைவுடைமையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் நோன்பு உதவுகிறது" என்று கூறியுள்ள திருத்தந்தை, "உண்மையான நோன்பு என்பது, தற்பெருமையில் அல்ல, மாறாக, பணிவிலும் நம்பிக்கையிலும் வேரூன்ற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

### கடைபிடிக்கவேண்டிய சுயக்கட்டுப்பாடுகள்

"தீங்கு விளைவிக்கும் பேச்சைத் தவிர்க்க வேண்டும்" என்றும், "கத்தோலிக்கர்கள் சமூக ஊடகங்களிலோ அல்லது பொது விவாதங்களிலோ கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தவோ, தீர்ப்பளிக்க அவசரப்படவோ அல்லது அவதூறுகளைப் பரப்பவோ கூடாது. அதற்குப் பதிலாக இரக்கம், மரியாதை மற்றும் நம்பிக்கையுடன் பேச வேண்டும்" என்றும் ஊக்குவித்துள்ளார் திருத்தந்தை.

தவக்காலத்தின் சமூகப் பரிமாணம் குறித்து தனது செய்தியில் எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, "பங்குத்தளங்கள், குடும்பங்கள் மற்றும் தலத் திருஅவைச் சமூகங்கள், செவிசாய்த்தல் மற்றும் நோன்பு, உரையாடல், மனந்திரும்புதல் மற்றும் ஒருமைப்பாட்டை வளர்ப்பதன் வழியாக, பகிரப்பட்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும்" என்று ஊக்குவித்துள்ளார்.

### மனமாற்றம் என்பது நீதியின்மேல் நாட்டம்

"மனமாற்றம் என்பது தனிப்பட்ட மனசாட்சியை மட்டுமல்ல, உறவுகளின் தரத்தையும், நீதி மற்றும் ஒப்புரவிற்கான சமூகத்தின் நாட்டத்தையும் உள்ளடக்கியது" என்று தனது செய்தியில் எழுதியுள்ளார் திருத்தந்தை.

இறுதியாக, தவக்காலம் கிறிஸ்தவர்கள் கடவுளிடமும், தேவையில் இருப்போரிடமும் அதிக கவனம் செலுத்தவும், 'அன்பின் நாகரிகத்தை' கட்டியெழுப்ப உதவவும் இறைவேண்டல் செய்து இவ்வாண்டிற்கான தனது தவகாலச் செய்தியை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# சமூகப் பொறுப்புடன் பணியாற்ற நிர்வாகத் தலைமை அலுவலர்களுக்கு அழைப்பு!

திருத்தந்தை லியோ அவர்கள், நவீன சவால்களையும், குறிப்பாக பொது நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவின் அறநெறிமுறை நிர்வாகத்தையும் எடுத்துரைத்த அதேவேளை, தொழில்நுட்பம் மேட்டுக்குடியினரின் நலன்களுக்க்காகப் பணியாற்றுவதற்குப் பதிலாக பொது நன்மைக்கு சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பிப்ரவரி 16, திங்களன்று, திருப்பீடத்தில் இத்தாலியின் நிர்வாகத் தலைமை அலுவலர்களுக்கு ஆற்றிய உரையில், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கும், வலுக்குறைந்தவர்களைப் பாதுகாப்பதற்கும், பொது நன்மையை நிலைநிறுத்துவதற்கும் அவர்களின் தார்மீக மற்றும் குடிமைப் பொறுப்பை வலியுறுத்தினார்.

புனித அம்புரோசின் வாழ்விலிருந்து உள்ளொளிப் பெற்று, திருஅவைக்கும் அரசுக்கும் இடையிலான வரலாற்று ஒத்துழைப்புக் குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை, அதிகாரத்தை வலிமையின் ஓர் அடையாளமாகக் காட்டுவதற்குப் பதிலாக சேவையின் ஒரு வடிவமாகக் கருதுமாறு அவர்களை ஊக்குவித்தார்.

மேலும் “பொது ஒழுங்கைப் பேணுவது என்பது குற்றங்களைத் தடுப்பது மட்டுமல்ல, சமூக வன்முறை, பொய்கள் மற்றும் கலாச்சாரத்தின் வீழ்ச்சியை எதிர்த்துப் போராடுவதும் ஆகும்” என்று குறிப்பிட்டுக் காட்டினார் திருத்தந்தை.

ஹிப்போவின் அகுஸ்தினாரையும் இத்தாலிய அரசியலமைப்பையும் மேற்கோள் காட்டி, "பொது ஊழியர்கள் சட்டம் மற்றும் மனசாட்சியால் வழிநடத்தப்பட்டு, நேர்மையுடன் செயல்பட வேண்டும்" என்று கோடிட்டுக் காட்டினார் திருத்தந்தை.

நவீன சவால்களையும், குறிப்பாக, பொது நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவின் அறநெறிமுறை நிர்வாகத்தையும் எடுத்துரைத்த திருத்தந்தை, “தொழில்நுட்பம் மேட்டுக்குடியினரின் நலன்களுக்காகப் பணியாற்றுவதற்குப் பதிலாக, பொது நன்மைக்கு சேவை செய்ய வேண்டும்” என்று எச்சரித்தார்.

"குறிப்பாக புலம்பெயர்ந்தோர் மற்றும் தேவையில் இருப்போருக்கு உதவுவதற்காக திருஅவை அரசுத் தலைவர்களுடன் இணைந்து செயல்படும்" என்று மீண்டும் அவர்களுக்கு உறுதிப்படுத்தி, அவர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கி தனது உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

செல்வராஜ் வசைமாணிக்கம் - வத்திக்கான்

# கூலிம் பங்கு மக்கள், அருட்தந்தை 'Monsignor' ஹென்றி அவர்களின் 25 வது குருத்துவ ஆண்டின் வெள்ளி விழாவை 25.1.26 அன்று சிறப்பாகக் கொண்டாடினர்



திருவாளர் ராஜு, காலஞ்சென்ற திருமதி பாக்கிய மேரி அவர்களுக்கு எட்டாவது மகனாக 1969 யில் பிறந்தவர் அருட்தந்தை 'Monsignor' ஹென்றி ராஜு அவர்கள். அவருடன் பிறந்தவர்கள் 5 சகோதரிகளும் 3 சகோதரர்களும் ஆவர்.

1976 ஆம் ஆண்டு புனித பெட்ரிக் ஆரம்பப்பள்ளியில் மறைக்கல்வி படிக்கும் போதே தவறாமல் மறைக்கல்விக்கும் திருப்பலிக்கும் செல்வார். பின்னர் அவரின் குடும்பம் ஆயர் மெரா இடத்தில் வசித்து வந்தனர். அவர் இருசக்கர வண்டியில் தேவாலயத்தில் திருப்பலியிலும், அருங்கொடை செபத்திலும் கலந்துக் கொள்வது வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் அருங்கொடை செபத்தில் கலந்துக்கொண்ட போது ,அவருக்கு இறைஅழைத்தல் இருப்பதாக வெளிப்பாடுக் கிடைத்தது. ஆனால் அவர் அதற்கு தான் அருகதையற்றவன் என்று எண்ணினார். அனுதினமும் செபமாலை செபிக்கும் வழக்கம் கொண்டிருந்த அவர் ஒரு நாள் இரவு செபமாலை செபித்து உறங்குகையில் கனவில் தோன்றிய அன்னை மரியா ஏசாயா ஆறாம் அதிகாரத்தை எடுத்து படிக்க கூறினாராம். இதற்கிடையே, 1983 ஆண்டிலிருந்து கூலிம் திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் பங்கு குருவானவர் இல்லாமல் இருந்தது. 1985 ஆண்டு அருட்பணியாளர் ஸ்டில்ஸ் லீயூ இவரிடம் நீ எப்பொழுது குருத்துவ கல்லூரிக்குப் போக போகிறாய் என்று கேட்டாராம். அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை யாம். மறுநாள் காலை அவருக்கு குருத்துவக் கல்லூரி நுழைவு மனுபாரத்தை கொடுத்து பூர்த்தி செய்து அனுப்பும் படி சொன்னாராம். அப்பொழுது அவர் படிவம் ஆறு படித்துக்கொண்டிருந்தாராம்.

1988 ஆம் ஆண்டு குரு மடத்தில் பயிற்சியில் கலந்துக் கொண்டார். ஆரம்பத்தில் அவருக்கு விருப்பமில்லை எனினும் தொடர்ந்துக் குருத்துவக் கல்லூரிக்குச் செல்ல மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்த அவரை இயேசு கிறிஸ்துவின் வார்த்தையால் மனம் மாறி பின் குருமடத்திற்குச் சென்றார். இவர் தைவானில் சீனம் கற்றிருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு கூலிப் இரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

2010-2012 கூலிம் பங்கு குருவானவர்......மறுபக்கம் காண்க.

## மலேசிய மறைப்பணி மாநாடு 2026-க்கான செபம் (MPC2026)

ஆண்டவராகிய இறைவா, தந்தை, மகன், தூய ஆவியாரின் ஐக்கிய வாழ்விற்கு எங்களை அழைத்து, உமது மக்களாக நாங்கள் இணைந்து பயணிக்க எம்மை அழைக்கின்றீர்.

2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மலேசிய மறைப்பணி மாநாட்டிற்கு நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்தும் இவ்வேளையில், எங்களை வழிநடத்தியருளும். ஆழமாக செவிமடுக்கவும், உண்மையுடன் தேர்ந்து தெளியவும், நீர் எங்களை வழிநடத்தும் பாதையில் நம்பிக்கை கொள்ளவும் எங்களுக்குக் கற்றுத் தந்தருளும்.

நாங்கள் ஒன்றிணைந்து தேர்ந்து தெளிந்து கொண்டிருக்கும் நான்கு முக்கியத் தளங்களை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

எங்கள் குடும்பங்களை ஆசீர்வதியும்; அவை அன்பு, விசுவாசம், மன்னிப்பு மற்றும் நம்பிக்கையின் இருப்பிடங்களாகத் திகழச் செய்யும்.

எங்கள் திருச்சபையைப் புதுப்பியும்; நாங்கள் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் நற்செய்தியின் மகிழ்ச்சியான சாட்சிகளாக வளர அருள்புரியும்.

படைப்பின் கூக்குரலுக்கு எங்கள் இதயங்களைத் திறந்தருளும்; நாங்கள் இந்த பூமியைப் பக்தி மரியாதையுடனும், பொறுப்புணர்வுடனும், நன்றியுணர்வுடனும் பராமரிக்கச் செய்யும்.

சமூகத்தில் எங்களை வழிநடத்தும்; நாங்கள் நீதியைத் தேடவும், அமைதியை மேம்படுத்தவும், ஏழைகள் மற்றும் நலிவுற்றோருடன் உடன்பயணிகளாய் நிற்கவும் எங்களுக்குத் துணைபுரியும்.

எங்கள் தேர்ந்து தெளிதலின் வழியாக உருவாகும் மறைப்பணிப் பாதைகள், எங்கள் சமூகங்களை விசுவாசத்தில் வளப்படுத்தவும் வலிமைப்படுத்தவும் செய்வீராக.

இறைவார்த்தையைத் தியானித்து, விசுவாசத்தில் பயணித்த திருச்சபையின் தாயான மரியன்னையோடு இணைந்து, நம்பிக்கையில் ஒன்றாகப் பயணிக்க எங்களுக்குக் கற்றுத் தந்தருளும்.

நாங்கள் கிறிஸ்துவில் வேரூன்றி இருக்கவும், ஒருவருக்கு ஒருவர் செவிமடுக்கவும், உமது தூய ஆவியாரின் செயல்பாடுகளுக்கு எங்களை முழுமையாகக் கையளிக்கவும் செய்தருளும்.

இந்த மாநாடு, நாங்கள் நேசிக்கும் இத்திருநாட்டில் பணியாற்றும் மலேசியாவின் ஒரே கத்தோலிக்கத் திருச்சபையாக இன்னும் உண்மையுடன் வாழ எங்களுக்கு உதவுவதாக.

எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# மலேசிய மறைப்பணி மாநாடு 2026 (MPC2026) பற்றிய தகவல்கள்

### மலேசிய மறைப்பணி மாநாடு 2026 என்றால் என்ன?

மலேசிய மறைப்பணி மாநாடு 2026 (MPC2026) செப்டம்பர் 9 முதல் 13 வரை சிபுவில் (Sibu) நடைபெறவுள்ளது. இதில் சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவிலிருந்து சுமார் 800 அருட்பணியாளர்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மலேசிய கத்தோலிக்கத் திருஅவையின் வரலாற்றில் நடைபெறும் முதலாவது தேசிய அளவிலான மறைப்பணி மாநாடு இதுவாகும்.

### MPC2026 என்பது என்ன?

MPC2026 என்பது வெறும் மாநாடோ அல்லது முடிவுகளை எடுக்கும் கூட்டமோ அல்ல. இது மலேசியத் திருஅவை ஒன்றாக இணைந்து, செவிமடுத்து, இன்று நாம் ஒரு திருஅவையாக எவ்வாறு வாழவும் பணியாற்றவும் அழைக்கப்படுகிறோம் என்பதைத் தேர்ந்து தெளிவதற்கான ஒரு களம். பங்குத்தளம், மறைமாவட்டத் தளம் மற்றும் மண்டலத் தளங்களில் ஏற்கனவே பிரதிபலிக்கப்பட்ட சிந்தனைகளைத் திரட்டி, தேசிய அளவில் பகிரப்படும் ஒரு பொதுவான களமாக இது அமைகிறது.

### MPC2026-ன் நோக்கம் என்ன?

இதன் நோக்கம் கொள்கைகளை உருவாக்குவதோ அல்லது நிலையான திட்டங்களை வகுப்பதோ அல்ல. மாறாக, மலேசியத் திருஅவை தனது மறைப்பணியைத் தொடர வழிகாட்டும் மறைப்பணிப் பாதைகளைத் (Pastoral Pathways) தேர்ந்து தெளிவதே இதன் நோக்கம். இந்தப் பாதைகள் ஒரு திசையையும் வழிகாட்டுதலையும் வழங்குமே தவிர, ஒவ்வொரு மறைமாவட்டத்தின் மீதும் திணிக்கப்படும் கட்டளைகள் அல்ல. ஒவ்வொரு உள்ளூர் திருஅவையும் தனது சூழலுக்கு ஏற்ப இவற்றைத் தேர்ந்து தெளிந்து செயல்படுத்துவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

### MPC2026-ல் நாம் என்ன செய்வோம்?

மாநாட்டின் போது பின்வருபவை நடைபெறும்:

1. ஒன்றாகக் கூடுதல்: நமது கலாச்சாரங்கள், மறைப்பணி எதார்த்தங்கள் மற்றும் விசுவாச அனுபவங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரித்து, மலேசிய கத்தோலிக்கத் திருஅவையாக நாம் ஒன்றுகூடுகிறோம். ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் என்ற முறையில், வெவ்வேறு பொறுப்புகளைக் கொண்டிருந்தாலும், ஆண்டவரின் ஒளியில் ஒன்றாகப் பயணிக்கும் ஒரே திருஅவையாக நாம் வருகிறோம்.
2. தூய ஆவியாருக்குச் செவிமடுத்தல்: நமது திருச்சபையில் தூய ஆவியார் எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிப்போம். அறிக்கைகளையோ சாதனைகளையோ பகிர்வதை விட, நமது விசுவாச அனுபவங்களைப் பகிர்ந்து, அவற்றில் இறைவனின் உடனிருப்பைக் கண்டறிய முற்படுவோம். இந்தச் செவிமடுத்தல் செப உணர்வோடும், திறந்த மனதோடும், கடவுள் நம் ஒவ்வொருவரிலும் வெவ்வேறு வழிகளில் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை உணரும் விதமாகவும் அமையும்.
3. மாநாட்டின் பலன்கள்: MPC2026-ன் பயணம் பின்வரும் பலன்களைத் தரும்:

- o ஆயர்களின் மறைப்பணிச் செய்தி: மலேசியத் திருச்சபைக்கான ஒரு பொதுவான பார்வையை ஆயர்கள் வழங்குவார்கள்.
- o மறைப்பணிப் பாதைகள்: நமது சமூகத் தேர்ந்து தெளிதலின் வழியாகப் புதிய மறைப்பணிப் பாதைகள் உருவாகும். இந்தப் பாதைகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் ஒப்படைக்கப்படும்; அவை அந்தந்த மறைமாவட்டச் சூழலுக்கு ஏற்ப விவேகத்துடன் செயல்படுத்தப்படும்.

### மலேசியத் திருச்சபைக்கு MPC2026 உணர்த்தும் செய்தி என்ன?

விசுவாசம் என்பது தனிமைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பதை MPC2026 நமக்கு நினைவூட்டுகிறது. வெவ்வேறு அனுபவங்களைக் கொண்டிருந்தாலும், பகிரப்பட்ட ஒரே பணியைக் கொண்ட, ஒன்றாகப் பயணிக்கும் இறைமக்கள் நாம் என்பதை இது வலியுறுத்துகிறது. திருச்சபை முழுவதையும் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைப்பணியில் வளர இது அழைப்பு விடுக்கிறது. இந்த மாநாட்டிற்கு அப்பாலும் தூய ஆவியார் நம்மைத் தொடர்ந்து வழிநடத்துவார் என்ற நம்பிக்கையை இது விதைக்கிறது.

எனவே, MPC2026 என்பது ஒரு முடிவுப் புள்ளி அல்ல; மாறாக, இது மலேசிய கத்தோலிக்கத் திருஅவையாக ஒன்றிணைந்து செவிமடுக்கவும், தேர்ந்து தெளியவும், ஒன்றாகப் பயணிக்கவும் செய்கின்ற ஒரு நீண்ட பயணத்தின் முக்கியத் தருணமாகும்.



2012-2018 புனித அன்னாள் தேவாலயத்தின் மேற்பார்வையாளர் (administrator)

2018-2025 கூலிம் தேவாலய பங்கு குருவானவர் (Monsignor)

பங்கு மக்களிடம் வேற்றுமை பாராமல் அன்பும் அக்கறையுடனும் ஞானத்துடனும் பங்கு மக்களை வழிநடத்தி வந்திருக்கிறார். 25 ஆண்டு காலமாய் எத்துனை சிக்கல்கள் வந்தாலும் இறை ஆசியால் அவற்றை கடந்து வந்தவர் 'Monsignor' ஹென்றி ராஜூ. இறைவன் அவருக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும் இறை ஞானத்தையும் தூய ஆவியின் வல்லமையும் தந்து மக்களை வழிநடத்த எங்களின் இதய கனிந்த வாழ்த்துக்களும் நன்றியும்.

Jane Sandanasamy

# தவக்காலம் 2ஆம் வாரம் – ஞாயிறு

### கிறிஸ்து நமக்குத் தூய அழைப்பு விடுக்கிறார்!

**தொ.நூல் 12:1-4a, 2 திமொ 1:8b-10, மத். 17:1-9**

இன்று தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு. தவக்காலத்தின் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையும், இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானையும் இறைவேண்டலுக்காக மலைக்கு அழைத்துச் சென்ற நிகழ்வை நினைவுகூர்கிறோம். இறைவேண்டலின்போது, அவரது தோற்றம் மாறுகிறது. அவரது முகம் ஒளிர்கிறது. அவரது ஆடைகள் வெண்மையாகின்றன. சீடர்கள் அவர் உண்மையில் யார் என்பதைக் காண்கிறார்கள்.

இயேசு ஏற்கனவே அவருக்கு வரவிருக்கும் துன்பம் மற்றும் மரணத்தைப் பற்றிப் பேசிய பிறகு இந்த தோற்ற மாற்றம் நிகழ்கிறது. அவர் நிராகரிக்கப்படுவார், துன்பப்படுவார் என்றும் அவரைப் பின்பற்ற விரும்பும் எவரும் சிலுவையைச் சுமக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறியுள்ளார்.

தவக்காலம் ஒரு மலைப் பயணம். அது நம்மைச் சோர்வடையச் செய்வதற்காக அல்ல; நம்மைத் திடப்படுத்துவதற்காக. சீடர்களைப் போலவே, நாம் வெற்றி வாழ்வுக்குத் தயாராகி வருகிறோம். நாம் புனித வாரத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறோம்.

உண்மையில், நாம் வசதியான, சொகுசான கிறிஸ்தவத்தை விரும்புகிறோம் – தியாகம், மன்னிப்பு, பரிவிரக்கம் அற்ற வாழ்வில் குளிர்காய விரும்புகிறோம். இத்தகைய எதிர்பார்ப்பு பேதுருவிடமும் இருந்தது. இவை வேண்டாம் என்று இயேசு அறிவுறுத்தினார். நாம் இயேசுவைப் பின்தொடர்ந்து மலையிலிருந்து இறங்கி அன்றாட சவால்களை நேர்மையாக எதிர்கொள்ள வேண்டும்.

கிறிஸ்து "நம்முடைய தாழ்மையான உடலை தம்முடைய மாட்சி பெற்ற உடலுக்கு ஒப்பாக மாற்றுவார்" என்று புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். மலையில் ஒளர்ந்த ஒளி நமக்கான ஒளி என்பதை மனதில் கொள்வோம்.

“என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்” எனும் தந்தையின் குரல் நம்மிலும் ஒலிக்கட்டும். இந்த தவக்காலம் ஓர் உண்மையான ஏற்றமாக இருக்கட்டும்.

இன்று நமது சொந்த நல்ல மற்றும் கெட்ட அனுபவங்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். கீழ்ப்படிதல் மற்றும் தியாக அன்பின் வாழ்க்கை வாழ நாம் துணிகிறோமா? வெறும் நோன்பு, இறைவேண்டல், பக்தி முயற்சிகள் மட்டும் போதாது. சிலுவை நம்மை தியாக மற்றும் தூய அன்பிற்கு அழைக்கிறது. இதைத்தான் கடவுள் நம்மிடம் விரும்புகிறார்; அவருடைய விருப்பத்தை உறுதியுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்ள முற்படுவோம்.

ஆர்.கே.சாமி, சிர்ம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.